## 4.14 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் துவங்கப்படாத மற்றும் முடிக்கப்படாத பணிகள் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி2) துறை

அரசாணை (நிலை) எண்.186 நாள் : 16.11.2007

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 11.9.06
2. அரசாணை (நிலை) எண்.189, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 27.12.06
3. அரசாணை (நிலை) எண்.97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 13.6.07
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.48049/ 06/எஸ்.எஸ்.2 நாள் 10.9.2007

**ஆணை**

படிக்கப்பட்டவை 1ல் உள்ள அரசாணையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் எனும் புதிய திட்டத்தை 2006–07ல் அரசு அறிமுகப்படுத்தியது.

2. படிக்கப்பட்டவை 2ல் உள்ள அரசாணையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி இத்திட்ட செயலாக்கத்திற்காக ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலராக வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) நியமிக்கப்பட்டுள்ளார். படிக்கப்பட்டவை நான்கில் காணும் கடிதத்தில் 2006–07 ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதாகவும், நடப்பாண்டில் பணிகள் பல மாவட்டங்களில் துவங்கப்பட்டுள்ளது என்றும், பல்வேறு மாவட்டங்களிலிருந்து கிடைத்த பணிமுன்னேற்ற அறிக்கை மற்றும் களமேற்பார்வை அறிக்கைகளிலிருந்து இத்திட்டத்தை செயல்படுத்தும் போது பின்வரும் சிரமங்கள் ஏற்படுவதாக ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(அ) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களால் பலமுறை கோரப்பட்டும் பெரும்பாலான ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொள்ள முன் வருவதில்லை. அவர்கள் மிகையான ஒப்பந்தப்புள்ளி சதவிகிதத்தினை கோருவதால் வேலைகளை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

(ஆ) சில நிகழ்வுகளில் வேலைகள் பகுதியாக ஒப்பந்தக்காரர்களால் முடிக்கப்பட்டு, பல மாதங்களாகியும் முழுவதுமாக முடிக்கப்படாமல் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருக்கின்றன.

பலமுறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஒப்பந்தக்காரர்கள் யாரும் கலந்துக் கொள்ளாத நிகழ்வுகளிலும், பணிகளை பாதியில் விட்டுச் செல்கிற நிகழ்வுகளிலும், வரம்பு கடந்த ஒப்பந்தப்புள்ளி சதவிகிதத்தினை ஒப்பந்தக்காரர்கள் கூட்டு சேர்ந்துக் கொண்டு கோரக்கூடிய நிகழ்வுகளிலும் பணிகளை செயல்படுத்துவதற்கு மாற்று வழிமுறையை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகள் துவங்கப்படாமல் அல்லது மேற்கூறிய காரணங்களால் பணிகள் நிறுத்தப்பட்டு முடிக்கப்படாமல் உள்ள இனங்களில் பணிகளை முடிக்க பின்வரும் வழிமுறைகளை கடைபிடிக்கலாம் என்று ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

### (அ) ரூ.5 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள ஒப்பந்தப்புள்ளி கோராத பணிகள்

ரூ.5 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள பணிகளில், மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பதிற்குறிப்பு இல்லாத நிலையிலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகை மிக அதிகமாக இருப்பதாலோ பணிகளை எடுத்துச் செய்ய இயலாத நிலை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) சான்றளித்தபின், எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பணிகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றுவது போல், இத்தகைய பணிகளையும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளிடம் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் ஒப்புதல் பெற்று வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஒப்படைக்கலாம்.

### (ஆ) ரூ.5.00 இலட்சத்திற்கும் அதிகமான ஒப்பந்தப்புள்ளி கோராத பணிகள்

ரூ.5.00 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள பணிகளுக்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியபிறகும் பதிற்குறிப்பு இல்லாத இனங்களில், பணிகளை நிறைவேற்ற ஒப்பந்தப்புள்ளி

கோருவதற்கு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கலாம். கிராம ஊராட்சி உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை கடைப்பிடித்து பின்னர் ஒப்பந்தக்காரரிடம், பணியை செய்ய, ஒப்படைக்கலாம்.

**(இ) ஒப்பந்தப்புள்ளி கோரி பாதியில் கைவிடப்பட்ட பணிகள்**

ஒப்பந்தக்காரர்கள் பணியை பாதியில் விட்டுச் சென்ற இனங்களிலும், பணிகளை மெதுவாக செய்வதால் ஒப்பந்த காலம் ஏற்கனவே முடிவுபெற்றுவிட்ட இனங்களிலும், முடிக்கப்பெற வேண்டிய பணிகள் இன்னும் இருக்கும் இனங்களிலும், பணிகள் ஏதும் நடைபெறாத இனங்களிலும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெற்று வட்டார வளர்ச்சி அலுவலர் அப்பணி ஆணையை ரத்து செய்துவிட்டு, மீதமுள்ள முடிக்கப்படாத பகுதி வேலையை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி வசம் துறை மூலமாக முடிக்க, எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டத்தில் செயற்படுத்துவது போல ஒப்படைக்கலாம்.

3. மேற்கூறிய ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:–

i) ரூ.5 இலட்சம் அல்லது அதற்கும் குறைவாக உள்ள பணிகளுக்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியபிறகும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பதிற்குறிப்பு பெறப்படாத இனங்களிலும், ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை மிக அதிக அளவில் இருக்கும் இனங்களிலும், ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும், அத்தகைய பணிகளை கிராம ஊராட்சிகள் தாமே எடுத்துச் செய்ய (departmentally) மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படைக்க வேண்டும்.

ii) ரூ.5 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள பணிகளைப் பொறுத்தவரை, மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பதில் பெறப்படாத இனங்களிலும், ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு ஒப்பந்தப்புள்ளி மிக அதிக அளவில் உள்ள இனங்களிலும் ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிடையே கைவிடப்பட்ட இனங்களிலும் மேற்கண்ட பணிகளை கிராம ஊராட்சிகள் திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்ற கிராம ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளிக்க வேண்டும்.

4. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.210/SS(PK)/07 நாள் 1.11.2007ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்